சொல்லத் தயங்கிய காதல்

pax.ravichandra@gmail.co

Pax Ravichandra

03-2-2024

சொல்லத் தயங்கிய காதல்

எண்	உள்ளடக்கம்
1	கடல் தாய்
2	மானாட மயிலாட
3	மரண யாத்திரை
4	மதவாத மனிதர்
5	மோகன் என் நண்பன்
6	மோகினி
7	முதல் காதல்
8	நடையும் உலாவும்
9	நான் நீ அவன்
10	நெஞ்சம் மறப்பதில்லை
11	நெஞ்சில் பெய்யும் பூமழை
12	நிலவு சிரிக்கின்றது
13	நிலவும் மலரும்
14	நூலகத்து நூலிடையாள்
15	ஒரு மலரின் கதை
16	பாயும் தவளை
17	பெண்ணோ பேரின்பம்
18	பௌர்ணமி காலத்து இரவுகள்
19	சொல்லத் தயங்கிய காதல்
20	சுகம் எங்கே
21	சுவரில்லாத சித்திரங்கள்
22	தேய்பிறை நிலவின் விடியாத இரவுகள்
23	தோகை மயில்
24	உண்மை நட்பு
25	உறவும் பிரிவும்

கடந் தாய்

கடலில் கரிக்கும் உப்பு
இராப்பகலாய், நாளும் கிழமையும்
ஓயாது உழைத்து அலைகள் சிந்திய
வியர்வைதான் போலும்

உப்புக் கரிக்கும் கடலும், உவந்தளிக்கும் மழையோ
மண்ணுக்கு உயிராகி-பயிர்களுக்கு தேனாகி
பருகிட அமுதாகிடும் உண்மை
கதிரவனால் நன்னீராகி, மழையாகும் அருமை

தன்னில் கலக்கும் நதியையும், தன்மயமாக்கி இன்புற,
கடல் உயிரினங்களும் களிப்போடு வாழ்ந்து களிப்புற
கடலையும் அழிக்கும் கயவனாய் மனிதன்.

கழிவுகளைக் கொட்டி-கடலையும் குப்பைத் தொட்டியாக்கி
பவளப்பாறைகள் அழிய, மீன் வளங்களை கொள்ளையிட்டு
அணுவாயுதப் பரிசோதனைகளுக்கு ஆய்வு கூடமாக்கி
கடற்தாயை வன்புணர்வு செய்யும் கொடுமை மாறுமோ?

நீரும், நிலமுமமாய் உலகம், வளங்களைச்
சூறையாடும் வல்லரசுக் கொள்ளையரால்-
மாசடையும் பூமி மனங்கொதிக்க, உயரும்
புவி வெப்பம் , திணறும் உயிரினம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-08-2013

மானாட மயிலாட

விழிகள் கயலைச் சொல்ல, மொழிகள் குயிலைச் சொல்ல
இதழ் “கள்” தேனைச் சொல்ல, வண்ண முகம் பௌர்ணமி
நிலவைச் சொல்ல, நடையும் நாட்டியம் சொல்ல
காமன் மகள் கண்டு வியந்தேன் காதலில் விழுந்தேன்

மலைத்தேன் என கண்கள் மலைத்தே சுவைக்க
பூந்தேன் எனப் புன்னகை இதழ்களில் சிந்த
பூமகளோ வண்ணப் பூவனம்
சந்தன மேனியிலோ சவ்வாதின் நறுமணம்

கன்னக்கதுப்பினில் சின்னக்குழி விழ
கானச் சிரிப்பினில் இராகங்கள் பல எழ
நெற்றித் திலகத்தில் நிலா உலாவர
செவ்விதழ் அமுதிற்காய் -என் காதல் தவம்

நடையினில் மானாட, இடையினில் மயிலாட,
காதல் போதையில் இதயம் தள்ளாடப் -பருகினால்
போதை தரும் மதுவுமுண்டு, பார்த்தாலே போதை
தரும் அழகை , கண்கள் இன்றுதான் கண்டதுண்டு

குமுதச் செவ்வாயில் அமுதப் புன்னகை
கார்குழலில் பூக்களோ பொன்னகை
பார்க்கத் தெவிட்டாத கண்களிற்கு காதல் சுவை
கன்னியோ அழகின் பேரவை

கண்டு மயங்க அழகின் பூவனம், உண்டு சுவைக்க
காதல் மதுரசம், பார்த்தேன், இரசித்தேன், சுவைத்தேன்
எனப் பருவங்களில் பல பூந்தேன், விழித்தேனிலோ காதல்,
பிரம்மன் கற்பனையிலோ கலைத்தேன்

அமுதிலும் பெருஞ் சுவை-அழகோ ஐம்புலனிற்கும்,
ஆறறிவுக்கும் தெவிட்டதா பெருஞ்சுவை
கம்பனும் பாடாத கவிதைச் சுவை
காதலாகி இரசித்த கன்னியோ காதலின் பேரவை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-9-8-2023

மரண யாத்திரை

கொரோனா கொன்ற சொந்தம் பாடையில் உறங்கிட
இருள் பூத்த அமாவாசை வானம் இதயச் சோகம் பகிர,
கண்ணீர் உதிர்வதா? உறைவதா என ஏங்கி நிற்க
சுற்றி நின்று சோகம் சொல்லும் ஏழை இதயங்கள்

சொந்தங்களின் தோள்களில் பாடை, சுற்றத்தின்
கரங்களில் எரியும் தீப்பந்தம், காலமெல்லாம்,
நிணமும், பிணமும் சுமக்கும் கங்கை இன்று சுமக்க
கொரோனா கொன்றழித்த பல சொந்தம்

பண் அழுதது- பறை அழுதது, உறவும் பிரிவு
சொல்லியழுதிட, விண்ணும் மழையாய் அழுதிட,
ஒற்றையடிப் பாதையில் -ஓர் மரண யாத்திரை
உறவின் விழிகளிலோ கண்ணீர்த் திரை

நெஞ்சம் சுடுகாடு, விழிகளோ மழைக்காடு
பாடையே மஞ்சம், இறுதியில் தாய் மடியாய்
ஓடும் கங்கையில் மடிந்தவர் தஞ்சம்
எண்ணிட விம்மிடும் ஏழைகள் நெஞ்சம்

சட, சட வென இறக்கையடித்து ஆந்தை ஒன்று அலறிப் பறந்து
சோகம் சொல்லி மௌனத்தைக் கலைத்திட, இருளைக் கலைத்து
தீப்பந்தங்கள் போராடி எரிந்திட, வறுமை வாட்டும் வாழ்வை
கொரோனா வாட்டி வதைக்க, நாளும் பல மரணங்கள்

பாடைச் சுமை தோள்களை அழுத்த, பெரும் பாரச்சுமை
நெஞ்சை அழுத்த, கூடிக் குலாவிய சொந்தங்கள் கொத்துக்
கொத்தாய் -நாளும் கொரோனாவிற்கு இரையாக- இரவில்
ஈமச்சடங்கின்றி கங்கையில் மிதக்க விடும் பிணங்கள்,

கங்கையில் கலந்தால்-மடிந்த, சொந்தம் சொர்க்கம் போவார்
மலிந்த நம்பிக்கையாக, அடுப்பெரிக்க வழியில்லாத ஏழைகள்
பிணமெரிக்க வழியின்றி, இடுப்பளவு ஆழத்தில் இறங்கி
பாடையை மிதக்கவிட்டு, சோகத்தில் இதயத்தை மூழ்கடித்தார்

முகக்கவசமோ, தனிமனித இடைவெளியோ,
சவர்க்காரமோ காணாத வாழ்வில்
சாவை நித்தம் காண-கொரோனாவால்
உயிரிழக்கும் சொந்த பந்தங்கள்.

சடலங்கள் மிதந்து செல்ல-சொந்தங்கள்
கங்கையில் மூழ்கி எழுந்து, நெஞ்சச் சுமையை குறைத்து
சேரி நோக்கி நடந்திட, தேடி வரும் ஒப்பாரியும்
அழுகையும், புதிய சாவின் சேதி சொல்லும்

தலைச்சுமை இறக்கிட- சுமைதாங்கி போதும்
மனச்சுமை இறக்கிட தாய் மடி போதும்
வறுமை சுமை இறக்கிட கடன் சுமை ஏற்று
கொத்தடிமைகளான உறவுகள்

கொரோனா கொன்றழித்த சொந்தங்களை
எரித்து, ஈமக்கடன் செய்ய வழியின்றி
கங்கைக்குத் தாரை வார்த்து-இரகசியமாய்
ஈமக்கடன் முடித்த பரதேசிகள்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-9-8-2023

மதவாத மனிதர்

இரவும், பகலுமாய்-சூரியனை சுற்றும் உலகில்
ஆஸ்தீகர், நாஸ்தீகர் என-இறைவனைப்
புகழ்ந்தும், மறந்தும் வாழும் மானுட
வாழ்வோ நாறிடும் நடைப் பிணம்

ஆண்டவன் உண்டெனும் ஆஸ்தீக உலகில்
ஆயிரம் மதங்கள், ஒன்றுபட்டு ஓர் இறைவனை வழிபட
ஒற்றுமையில்லாத அண்ணக நிலைகள்

நாமரூபம் இல்லாத இறைவனுக்கு, உருவங்கள்
குணம், குறி சொல்ல கற்பனையில் பல நூறு நாமங்கள்
ஒற்றுமைதான் கிறிஸ்துவின் போதனை-பிரிவினைதான்
கிறிஸ்தவத்தின் சாதனை-நிதரிசனங்கள்

சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறை-கறுப்புப் பணச்சலவை
கத்தோலிக் மதத்தை நாறடிக்க,, பலிகளால் நாறிய யூதமதம்
பாலஸ்தீனரை நாளும்-நரபலி கொடுக்கும் பாரோவின் கொடு வடிவம்.

சாதியம் ஓதிடும் வேதியரின் காவியும் வெளுத்திட
இனவாத-பிக்குகளின் சீவர ஆடையிலும் இரத்தம்
மதப்பயங்கரவாதம் உலகை அச்சுறுத்திட
போலிச்சாமிகளால் நாறிடும் மதங்கள்

மசூதி, ஆலயங்களில் குண்டுகள் வெடித்திட
மதவாத பயங்கரவாதங்களின்அச்சுறுத்தல்கள்
ஆணவத்தின் இறப்பும்-விழிப்புணர்வின் பிறப்பிலும்
மதங்கடந்த ஆன்மீகம், ஆஸ்தீகம் அறியாத தெய்வீகம்

அன்பும், உண்மையும் இறை வடிவம்
அணவமழிந்த விழிப்புணர்வே தெய்வீகம்
அறிந்தால் உலகம் என்றோ ஒன்றுபட்டிருக்கும்
அமைதி பிறந்திருக்கும்.

உனக்கே நீயே ஒளியாகிப் போ புத்த பெருமான் வாக்காக
உலகின் ஒளி நீங்கள் , உப்பு நீங்கள்-***உங்கள் ஒளி ஒளிர்வதாக***
இயேசு பெருமான் அறை கூவலாக
உண்மையே உங்களுக்கு விடுதலையளிக்கும்
பெருமான்களின் மாறாத போதனை

“ஸென் ஒன்றே வாழும் மதம்”
“விழிப்புணர்வை” அறியாத நடைப்பிணங்களே
வாழும் செத்த மதங்களை ஆளும் நிதம்.

காலைப்பொழுதை வன்புணர்வு செய்து-சூழல் மாசடைய
ஆலங்களில் அதிரும் ஒலிபரப்பிகள்- கிறிஸ்துவை அச்சுறுத்த
ஆலய முகப்பில் ஏற்றிய வெற்றுச் சிலுவைகள்

இனவாத சேற்றில் தம்மச்சக்கரம் சிக்கித் தவிக்க, பிறையும்,
மதப்பயங்கரவாதமாய், அமாவாசை இருளில் அலைக்கழிய
நாமங்களும், பட்டைகளும், காவிகளும் மதவாதம் வளர்த்து
மானுடத்தைப் பிரித்திட ஆளும் மதவாதம்

உண்மைக்கு சாட்சியம் சொல்லாமல் ஊமையும்,
அண்ணகருமான, மதங்கள், இன, மத, நிற
வாதங்கள் நிலைக்க, துன்புறும் கிறிஸ்துவாய்
-உலகெங்கும் ஒடுக்கப்பட்ட மானுடங்கள்

கடவுள் அன்பாயிருக்கிறார், அன்பில்
நிலைத்திருப்பவன் இறைவனில் நிலைத்திருக்கிறார்
இறைவனும் அவரில் நிலைத்திருக்கிறார்
மதம் கடந்த கீதம்

இன்றும் மதம் அபினியும் போதையுமான உண்மை
ஹே ராம்! யா அல்லா! ஓ என் இயேசுவே!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-9-8-2023

மோகன் -நட்பு

இனியவனே, நட்பெனும் நற்கொடை ஈந்தவனே
கல்லூரி கடந்து, காலங்கள் பல போனபின்பும்
கடல் கடந்து வாழும் காலத்திலும், கல்லூரி நட்பை
கற்பாய் காக்கும் உத்தம நண்பனே வாழ்க நீ

என் கவிதைகளைப் பகிரும்போதும், பாசத்தோடு வாழ்த்தி-
என் எழுத்தை ஊக்குவித்து உயிர்கொடுக்கும் இரசிகனே
உன் பிறந்த நாளில், என்றும் நலமோடு பல்லாண்டு வாழ
காதல் துணையோடு வாழ, பிரிய நண்பன் வாழ்த்துகின்றேன்

மஞ்சளும், குங்கும், மலர்ச்சரமும் துணையில் நிலைத்திட
மணக்கப் பூண்ட இல்லறத்தில் அறம், பொருள் இன்பம்
வற்றாது தழைத்திட, அன்பு இறைவனை வேண்டி
வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றேன்

வானூறும் நிலவும், தேனூறும் மலர்களும் சாட்சியாக
என் சித்தம், நினைப்பும், செய்கை உள்ளவரை
என் இதயம் ஒரு போதும் உன்னை மறவாது.

கல்லூரியிலும், கச்சேரி ஆற்றங்கரை ஓரத்திலும்
கதை பேசிக் கழித்த பொன்மாலைப் பொழுதுகள்
கடவுள் தந்த கொடையானது-கற்பாய்
நிலைக்கும் நட்பும் இறைவன் தந்த அருளானது

பள்ளிப் பருவம்போல் உலகில் இன்பமில்லை
பசுமை நிறைந்த நினைவுகளோடு, பாடித் திரிந்த
பறவைகளுக்கு, வாழ்வு சொர்க்மான உலகு
எண்ணிக் களித்திட என்றும் இன்பமான உறவு நட்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-9-8-2023

மோகினி

யாரடி நீ மோகினி? பார்த்த விழிகளும் மயங்க
பாய்ந்த வேல் விழிகளால் நெஞ்சில் காதல் பொங்க
முத்துப் புன்னகையால் உள்ளம் தொட்டு-சத்தமின்றி
என் நெஞ்சில் காதல் நர்த்தனத்தை அரங்கேற்றினாய்

ஆடும் பரதத்தில்-மனமாட, அபிநயத்தில் உணர்வுகள் பூத்தாட
கார்குழல் மலர்சோலையில் மலராய் நானும் சேர
சலங்கை ஒலியில் கவிதைகள் பிறக்க
வளையல்களின் சந்தத்தில் வசந்தம் பூத்ததே

ஆடுவது முல்லைக்கொடியோ, அணங்கு வாசமல்லிகையோ
காதல் வாசத்தில் என் மனதும் மணக்க, நாணத்தால்
கனியாய் நீ சிவக்க, காதல் கிளி கொத்தாத மாங்கனியை
மனம் கொத்த-என மனம் கொத்திடும் காதல் மனங்கொத்தி நீதானே

நாணி மண் பார்த்த அபிநயத்தில்-காதலாகி
என் மனம் உன் காலடியில் வீழ்ந்த மாயம்தான் என்ன?
கலைவாணி என்றே போற்றிய மனம்-இதயவீணையில்
மோகனத்தை இசைத்த அழகுக் கோலம்தான் என்னே!

கண்களில் ஈரம் நிலைக்க, வடிக்கும் கவிதைகளில்
அவலம் சுவைக்க, பூவான நெஞ்சில் வேல் விழிகளால்
பூவையிட்ட அழியாத அபிநயக் கோலம்
காலத்தால் ஆறாத காதல் காயமானதே

மையெழுதிய விழிகள்-நெஞ்சில்
எழுதிய காதல் மொய்யும் பொய்யானதே
இதழ் விரித்த மலரில் இனிக்கும் தேனருந்த கண்ட
காதல் கனவும் கானல் நீரானதே

அழகில் மோகனம், என்னை மயக்கி தேவகானம்
மாமல்லன் கண்ட காஞ்சி சிவகாமி
கோவலனை மயங்கிய காவிரி மாதவி
நான் மயங்கிய ஊர்வசி எங்கே?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-8-2023

முதற் காதல்

பருவத்தில் வந்த, முதற் காதல் வசந்தமும் பொய்த்திட-
கன்னி உருவோ, கல்லில் எழுத்தாய் நெஞ்சில் பதிந்திட
இன்றும் எண்ணித் துடிக்கும் என் இதயத்தில்
என் முதற் காதலின் துயரம்

கருவிழிகளுக்குள் நாவலும், கருந்திராட்சையும் கனிந்து இனிக்க
செவ்விதழ்களில்-மலைத்தேனும் மதுவும் கலந்து சுவைக்க
கார்குழலில்-மல்லிகையும், முல்லையும் மணக்க
இடையில் மின்னலும், கொடியும் மாறி நிலைக்க-அவள் அழகு

நடையில், நாட்டியமும், அன்னமும் கலந்து நடக்க
புன்னகையில் நாணமும், நேசமும் இணைந்து என்னை அணைக்க
வட்ட முகத்தில் நிலவும், மலரும் ஒன்றாய் சிரிக்க
மொழியில் கவிதையும். கானமும் ஒலிக்க கண்ட வண்ணமயில்

காதல் கானமிசைத்த புள்ளிக்குயில் முதல்
வசந்தத்தில் என் இதயத்தில் குடிவந்த கோலமயில்
போனதிசை யாரறிவார்?-காதல்
பைங்கிளியே நீ அறிந்தல் சொல்!

வண்ணத் தோகையின் கனிந்த மார்பில் எண்ணித் துய்த்த இன்பம்
கனவாய், பழங்கதையாய் போனது, முதற் காதலும் எண்ணிப் பார்க்க
ஒரு வசந்தமாய் ஆனதே! முதற் காதல் முள்ளா? மலரா?
வரமா? சாபமா? புதிரானதே, வருத்தும் நினைவானதே!

உண்டு சுவைத்த அறுசுவையும்-இன்று பத்தியமாய் மாறிட
மூப்போடு பூத்த அனுபஞானம் களிப்போடு நடைபோட
நிலா பூத்த இரவில் நெஞ்சம் உலாப்போக, சட்டென மேனி சிலிர்க்க
கால்களும் மண்டியிட்டு வான்நோக்கி வணங்கிய அனுபவம்

கண்களில் நீர் பூக்க, நடந்ததும், நடப்பதும், நடக்கவிருப்பதும்
இறை செயல் என்று இன்புற்றேன், தோல்விகளால் புண்பட்டு
அழுகையால் பண்பட்ட மனிதன்,-இறைவனைத்
தஞ்சமடைந்தே அமைதி கண்டேன்

காதலும் கடந்திட-காத்து அணைத்த. தாயும்
என்னை விட்டுப் பிரிந்திட இறைவனைச் சரணடைந்தே
இதயத்தில் அமைதி கண்டேன்

பொங்கும் அன்பால் இதயம் பூரித்து வழிய
வண்ணச்சோலையாய் மனம் மலர்ந்து மணம் வீச
வந்ததும் உன்னால், வாழ்வதும் உன்னால்,
இனி வருவதும் உன்னிடமே

என் சொந்தம் நீயே இறைவா
மனம் மகிழ்ந்து அமைதி காண
ஒரு வீடு இரு வாசல் -உலகம்
அறிந்தால் சுகமே

நான். நீ.,அது என்று ஏதுமில்லை-
இறைவன் என்றும் ஒன்றில்லை
இருப்பது தெய்வீகமே-அனுபூதியில் உணர்ந்தால்
அஹம் பிரம்மஸ்மி-அதுவும் நானே-
தத்தவமஸி-அதுவம் நீயே

நானும், அவளும் ஒன்றுக்குள் ஒன்றே
சூனியமும், பரிபூரணமும் ஒன்றே
காதலர் தோற்கலாம், காதல் தோற்பதில்லை
அன்பிற்கு தோல்வியல்லை

அன்பே கடவுள்
அன்பில் நிலைத்திருப்பவர் கடவுளில் நிலைத்திருக்கிறார்
கடவுளும் அவரில் நிலைத்திருக்கின்றார்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-8-2023

நடையும் உலாவும்

உடற்பயிற்சி உங்கள் நோக்கு-மனம் கழித்து உலாவுதல்
எந்தன் இலக்கு, புல்லின் மேல் கால்கள் பதிய
உரையாடல் தொடர, சுற்றிச் சுற்றி , ஒளி சிந்தும்
மைதானத்தை வலம் வருதலில் என் மனம் லயிக்வில்லை

சுந்தர நிலவை இரசித்து, தழுவும் தென்றலுக்கு நன்றியுரைத்து
மெட்டி குலுங்க கரைமோதும் அலைகளும், மோனத்தில்
தவமிருக்கும் மரங்களும் என்னோடு கதை பேச
இறைவனுக்கு நன்றி கூறும் பொழுதாய் என் அந்திப் பொழுது.

பொழுதும் இனிதாய் கழிய, மனம் கவிதை எழுத
இருளும், ஒளியும் கலந்த இன்பக்கலப்பும், வானின் சிவப்பும்,
மேகத்தின் தவிப்பும், நிலவின் களிப்பும் நெஞ்சை நிறைக்க
அறியாத முகங்களின் ஆனந்தப் புன்னகை பூக்க- என் நட்பு

குதூகலித்து விளையாடும் குழந்தைகளின் கும்மாளத்தில்
செவிகள் நனைத்து, ஆற்றோடு போகும் தோணி பார்த்து
பன்றி வருது ஓட்டி நில், கூவிப் பறக்கும் ஆட்காட்டியை வியந்து
பறக்கும் கொக்கு, காகம், கிளிக் கூட்டம் பார்த்து இரசித்து
இறைவனைப் போற்றலாய் என் உலா

நட்பு, பகைமை கடந்து சாட்சியாய் நின்று-அறியாதாரோடும்
அன்பை புன்னகையால் பகிர்ந்து, வண்டுகளின் ரிங்காரமும்,
வானம்பாடியின் கானமும் இரசித்து-விழிப்புணர்வோடு
ஆற்றோரம் நடத்தல் அமுதிலும் சுவையே!-
ஆன்மாவின் இசையே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-8-2023

நீ-நான்-அவன்

நானும் நீயும் எதிர் வீட்டுகாரர்கள் இளமையும், அழகும் என்னில்
பூத்துக்குலுங்க, உன் வீட்டு யன்னல் நாளும் திறந்து கிடக்க,
நீ இரசிக்க யன்னல் நிலாவாய் என் தோற்றங்கள்-உன் விழிகள் கொத்த-
காதல் கொய்யாத கன்னி என்னில் காதலின் கனிந்த மாற்றங்கள்.

கண்களால் காதல் விதை தூவி மோகமா? காதலா?
அறியாப்பருவத்தில் எங்கள் வீட்டின் வறுமைத் தோற்றத்தில்
நீ ஏற்படுத்திய வளமான மாற்றங்கள்-காதல்
என்று மனம் சொல்ல கன்னி என் மனதில் பூத்த பரவசம்

தொட்டுத் தழுவ நீ துடித்தாலும் , நாணி நான்
மறுத்தாலும் எரிக்கும் அணையாத காமத்தீ
நம் இருவர் நெஞ்சையும் எரிக்க-பார்வைகள்
ஒருவரை ஒருவர் அணைக்க காதலில் வீழ்ந்தோம்

உன் பார்வை என்னைத் தழுவும்போதெல்லாம்
சிலிர்த்த என் மேனி, உன் தழுவல்களுக்காய் தவித்த கன்னி
இனிக்கும் இரவில் யன்னலில் நீ யாத்த காதல் வேள்வி
என் மனதிலோ நாளும் ஒளிரும் காதல் ஜெகஜோதி

திரைகடல் ஓடித் திரவியம் நீ தேட, உன் காதல் திரவியமோ
காதலில் வாட, கால வெள்ளத்தில் நடந்தேறிய
என் கட்டாயத் திருமணம், கடல் கடந்து வந்து –ஸ்ரீராமனாய்
என்னை மீட்டு காதல் சுவையாய் நம் திருமணம்.

என் செவ்வாயும் உன் முத்தங்களால் சிவப்பாகமல்-
என் நூலிடையும் உன் அணைப்பால் நெகிழ்ந்து சிலிர்க்காமல்
மோகத்தில் உழுது காமத்தில் உன்னை விதைத்த
நமக்கோ மூன்று குழந்தைகள்

காலவெள்ளத்தில் என்னை மறந்து காசே உன் கடவுளாக
காதல் தீயில் வேகும் என் மனசு, கணவன் உனக்குப் புரியவில்லை
கட்டையாய் கிடந்த என்னை காமக்கறையனாய் நீ அரித்த நிலை-
வன்புனர்வு என உனக்கும் புரியாத அவல நிலை

நண்பனாய் வந்தவன் அழகைச், சிலாகிக்க, கவிஞனாய் வர்ணிக்க,
காதல் காய்ந்த உன் பாதையோ வரண்ட பாலைவனம்-புது
காதல் நதி பாயும் என் வாழ்வோ பூத்த நந்தவனம்.

என்னுள் எரியும் காமத் தீயை, அணைத்தே அவனும் அணைக்க
அணைக்க வளரும் காமத்தீயில் எரிந்து எரியாத காதல் செடியாய்
நான் துளிர்க்க -என் பஞ்சணையில் தொடர்ந்த காதல் வேள்விகள்
என் பொன்மேனியில் கலைஞனாய் அவன் இசைத்த மன்மத ராகங்கள்

சுற்றும் மெல்லிய கொடியாய் என் சுந்தர இடையைத் தழுவி
செவ்வாயில் இதழ் பதிக்க, செழித்த என் அழகு
நாணசி சிவக்க நான் களிக்க- உச்சி முதல் பாதம் வரை
முத்தங்களால் என்னை அளந்து தவித்த அழகிய பொழுதுகள்

அழகோ அளக்க முடியாத ஆழம் என்று அவன் தவிக்க-
அணைத்த கரங்களுள்-முல்லைக்கொடி நான் படர்ந்து பூத்துக்குலுங்க
கரையாய் கிடந்தவளை அலை அலையாய் வந்து-ஓயாமல்
அணைத்துச் செல்லும் காதலின் அலைகள், கனவிலும் நினைவிலும்
என்னைக் கரைத்த கஜீராகு சிற்பக் காதல் நிலைகள்.

காதலின் இரசனை அறியாத , கணவன் நீ-
தாழிட்ட கதவை, தட்டித் திறந்த உன் பார்வையில்
கௌதமனின் கோப அக்கினி

என்னை எரிக்கும் காமத் தணலை நீ
அணைத்திருந்தால்- காமன் வேள்வியை
தொடர்ந்திருந்தால்-இந்திரனிடம் மயங்கிய
அகலிகையாய் என் நிலை மாறுமோ?

என்னைத் துறந்து நீ போக, உன்னை துறந்து நான் வாழ
நான் பத்தினியல்ல-சாமானியப் பெண் , இன்று நீ வேறு
நான் வேறு, நல்ல நண்பர்கள் என்று நம் கதை தொடர
நாம் வாழும் தேசம் வேறு, கலாச்சாரம் வேறு

அழகிய பெண் வாரிசுகளை விட்டு
ஆண் வாரிசை நீ எடுத்துச் சென்றாய்
பெண் வாரிசுகளை நான் ஏற்று
புரட்சியாய் வாழக் கற்றுக் கொண்டேன்

இறுக்கங்கள் இல்லாத வாழ்வு எனக்கு இதமளித்திட
என்னைச் சுற்றிய காமன் வலையும் காதலின் வசந்தம் சொல்லிட
உன்னோடு வாழ்ந்த காலங்கள் நன்றே, இன்று
நான் வாழும் காலங்களும் நன்றே என்றும் வசந்தமே

காதலுக்கு வயதில்லை , காதலிக்கவும் வயதில்லை
காதலில்லா கணவன் மனைவி உறவு பாலைவனமே
ஒட்டாத மனங்கள்-ஒன்றாய் வாழ்வதிலும்,
பிரிந்து வாழ்வது நன்றே.

என் இமைச் சிறகுகளுக்குள் இன்றும் என்றோ நிகழ்ந்த
நம் இனிய பந்தம், என் வாழ்விற்கு பொன்விலங்கான
நம் திருமண பந்தம். அறியாப் பருவத்தில்
தேகம் அறியத் துடித்த ஆனந்தம்

உன் வீட்டு முற்றத்தில் கல்லாக, நான் அகலிகை அல்ல-
சாபமிட நீயும் கௌதமனும் அல்ல, ஆணினம் ஆள நினைக்கின்றது
பெண்ணினம் வாழத் துடிக்கின்றது, அறியாப் பருவத்தில்
நனைந்த காதல் மழையின் ஈரம் காய்ந்துபோனது

காமம் பட்டு கல்லான மனம்
காதலால் செழிக்க -என் புது வாழ்வு
அகலிகையாய் பூத்துக் குலுங்குது.

காமக் காளையின் மேய்சல் நிலமல்ல பெண்மை
காலமெல்லாம் கூடி வாழத்-திருமணம் காலத்தின் தேவையுமல்ல
காதல் அன்பின் சுதந்திரம், காதல் பெண்மையின் சுயம்வரம்.

என் பொன்மேனியில் காமத் தூசு, உன் மனதிலோ பணத்தின் மாசு
பொற்கூண்டில் வாழும் கிளியல்ல நான்-விரிந்த ஆகாயத்தில்
சிறகு விரித்துப் பறக்கும் சுதந்திரப் பட்சி -இறக்கை
விரித்துப் பறக்கின்றேன் என் கானத்தை விரும்பி இரசிக்கின்றேன்.

நீ உழுதிட மஞ்சத்தில் நான் மல்லாந்து கிடக்க-சட்டம்
தந்த வாழ்நாள் உத்தரவாத பத்திரமல்ல இல்லறம்
அன்பு மனங்கள் இணைந்து சுவைக்கும்
காதல் விருந்தோம்பல் சுதந்திரம்.

பூவை வருத்தாத வண்டின் மென்மையே காதல்
நான் விழித்துக்கொண்டேன் -காதலைப் புரிந்துகொண்டேன்
என்னைப் பிரித்துக் கொண்டேன்

இந்திரனும், கௌதமனும் அகலிகையின் வாழ்வில்
மனம் விரும்பியதும்- மங்கை விரும்பியதும்
முனி விரும்பியதும் ஏமாற்றங்கள்.

கிளியும், வௌவாலும் கோந்த பழங்கள் மண்ணில்
நாளும், புதுப்பழம் நாடும் பறவை இனங்கள் விண்ணில்
விலக்கப்பட்ட கனியோ-ஏவாளிற்கும் ஆதாமை புரிந்திட
அறிவானது., காமத்திற்கு பெண்மை உணவானது

விந்தும், பாம்பும் வடிவங்களில் ஒன்றே-யோனியில்
நீந்துவதும் மூழ்குவதும், இந்திரனுக்கு சாபம்-
யயாதிக்கு இன்பம், கண்ணனிற்கு லீலை,
பாஞ்சாலிக்கு திருமண பந்தம்?

பெண்மையின் ஆழத்தை ஆண்களால் புரியமுடியாது
பெண்மை தன்னை திறந்து மலர்ந்து ஈந்தால் ஒழிய
ஆணால் பெண்மையைத் தொட முடியாது-பெண்
மனதை தொடாத தொடுகை எல்லாம் வன்புணர்வுகளே

இல்லறத்தில் வன்புணர்வுகள் புதிதல்ல
அறம் கடந்த-தொடர் கதைகளே
பெண்மை போர்க்கொடி ஏந்தாதவரை
உலகிற்கு தெரியாத இரகசியங்கள் இவை

விறைத்த ஆண்குறி விந்துகளை துப்பிட
விளை நிலமாய் களையையும் பயிரையும் ஏற்பது
தரிசு நிலமல்ல-தாய்மையின் புனித கருவறையே
புரிந்தால் காதலை வாழ்த்துங்கள்

காதல் பந்தமல்ல சுதந்திரம்
காதல் பொற்கூண்டல்ல விரிந்த ஆகாயம்
காதல் ஆண் பெண் உறவல்ல
அன்பின் விதைப்பிடம்-ஆணவத்தின் பலிபீடம்

சரணாகதியடையும் நிர்விகல்ப சமாதி அது
ஆணவத்தை ஆகுதியாக்கும் வேள்வியது.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-8-2023

நெஞ்சம் மறப்பதில்லை

என்னை நீ மறுத்தாலும், என் நெஞ்சம் உன்னை மறவாது
மறக்கவும், துறக்கவும், காதலைப்போல் கொடிய
துன்பம் உலகில் ஏதுமில்லை, காதல் தெய்வீகமடி,
ஷா ஜகான், மும்தாஜ் சொல்லிய வேதமடி

காதல் நெஞ்சுக்கு உன் நினைவே சுகந்தமடி
என் நெஞ்சுக்கு நீதான் இன்பமடி,-தோற்றாலும்
காதல் சுகமான சுமையடி, ஒரு தலைக்
காதலானாலும், நீதான் என் உயிரடி

ரோஜாவாய் நீ என்னைச் சூட ராஜாவாய் நான் இல்லை
வீணையாய் நீ மீட்டிட -கலைவாணி வீணையாய் நானில்லை
தந்நி அறுந்த என் இதயவீணயில் முகாரியடி-தவிக்கும்
உன் நெஞ்சுக்குள் துடிப்பதும் என் இதயமடி

கண்களால் காதலை விதைத்து கண்ணே நீ மறைந்தாய்
உன் பிரிவு முள்ளாய் தைத்தாலும், என் காதல் ரோஜா
நீயடி, என் வானில் அமாவாசை என்றாலும்
என்றும் என் காதல் வானத்துப் பௌர்ணமி நீயடி

கடந்து போகையில்-கண்களால் பூந்தென்றலைப்போல்
உன்னைத் தழுவுகிறேன், அறிந்தும் அறியாதவள்போல் உன் பாவம்,
உன் காலடி மண்ணை திருமண்ணாய் பூசுகின்றேன்
காதல் தேவதை பக்தனுக்கு கடைக்கண் காட்டாத சுபாவம்

காத்திருத்தலும், நீ வரும் வழி பார்த்திருத்தலும்
என் காதல் தவமானதடி, உன் காதலை வரமாக்கி ,
உன் உயிர் மூச்சால் வாழும் காதலன் நானெத் தெரிந்தும்
தெரியாதவளாய் நடிக்கின்றாய்-ஏனடி? நெஞ்சு வலிக்குதடி

உன் கண்படு தூரத்தில் நானிருந்தும்-உன் நெஞ்சின்
குவித்தூரத்துகசு அப்பால் என் விம்பமடி-இதயம் வலிக்குதடி
கடந்து போகையில்-உன் வாசம் முகர்ந்து சிலிர்க்கும் என் உயிர்
என்னைப் பாராது போகையில் கணமும் மரிக்குதடி

நெற்றிப் பொட்டாய் ஏனும் என்னை இட்டுக் கொள்ளடி
என் நேசம் மலரட்டும், ஒரு மல்லிகை மொட்டாய்
ஏனும் சூடிக்கொள்ளடி என் இதயம் குளிரட்டும்-காதலே
நீ மலரும்வரை காத்திருப்பேன், காலம் பொருட்டல்ல கண்மணி

கண்ணீர் மலர்களால் மாலையிட்டேன், புழுதியில் எறிந்துவிட்டாய்,
கவிதையால் காதல் தூது விட்டேன், காகிதக் கப்பலாய் மழை நீரில்
ஓடவிட்டாய், நெஞ்சமெங்கும் காதல் காயங்களடி, அம்பு பட்ட அஞ்சுகமாய்த்
துடிக்கின்றேன், என் இதய ஒலி-இன்னுமா, உனக்கு கேட்கவில்லை,

உன் கூந்தலுக்கு மலரானாள் மல்லிகையாய் மணந்திருப்பேன்,
உன் செம்பஞ்சு கால்களுக்கு கொலுசானால் , இசைபாடி நடந்திருப்பேன்,
உன் நெற்றிக்கு பொட்டானால், குங்குமமாய்க் குதூகலித்திருப்பேன்
உன் இதயத்தில் காதலானாள் என் உயிரை ஈந்திருப்பேன்

கவிதை கேட்டாய், கானம் கேட்டாய், ஏனடி என் இதயத்தை மட்டும்
கேட்க மறந்தாய், கேட்டதெல்லாம் கொடுத்தேன்- ஏற்க நீ
மறுக்கவில்லை, என்னைக் கொடுத்தேன் மறுமொழி
சொல்லவில்லை, மறுப்பும் சொல்லவில்லை இதயம் வலிக்குதடி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-8-2023

நெஞ்சுக்குள் பெய்யும் பூமழை

கருவானிலோ மாதம் ஒரு பௌர்ணமி- என் காதல் வானிலோ
நாளும் பௌர்ணமி, வருடத்திலோ ஒரு வசந்தகாலம்
என் வாழ்விலோ நாளும் வசந்தகாலம், மழைக்கும்
ஓர் மாரி காலம் என் காதல் மழைக்கோ ஏது காலம்?

வண்ணமும் வாடி, பூந்தேனும் வற்றும் பூக்களின் வாழ்வோ
ஒரு சில நாள், பூந்தேனும் வற்றாது, பூமணமும் மாறாத
என் காதல் பூந்தேவியின் வாழ்வோ-காலம் கடந்து
காதல் வாழும் காமெல்லாம் வாழும்

கொவ்வையிதழ் தேனமுதை, கொஞ்சும் கிளிபோல்-முத்தங்களால்,
அள்ளிப் பருகிய மனம்-இதழ் கள் உண்ட போதையில் கன்னியைக்
கட்டியணைத்தே காதல் தீ அணைக்க-அணையாத் தீயாய்
வளரும் காதல் தீயோ, காதலின் யாகத்தீ-நாமோ ஆகுதி

வண்டு சுவைத்த மலரும் ஒரு மாலைக்குள் வாடி உதிர
கண்டு சுவைத்து காதல் மலரோ என் நெஞ்சத்து வாடா மலர்
உண்டு சுவைக்கும் அறுசுவை உணவும் ஒரு பொழுது திகட்டும்
உண்டு சவைத்தும் திகட்டாத அருஞ்சவை காதல் ஒன்றே புகட்டும்

கன்னி விழி தொட்டு , கண் பட்டு, மலர்ந்த காதலால்
நெஞ்சம் பூபாளம் இசைக்க, கனவிலும், தூக்கத்திலும்
கானமிருதமாய் காதலியாள் தேவராகம் ஒலிக்க,-நாளும்
கொஞ்சி மகிழும் காதல் அஞ்சுகமாய் மலரும் வாழ்வு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-8-2023

நிலவு சிரிக்கின்றது

விழியளந்து அழகில் மனம் இலயிக்க
கனிமொழியை மனம் இசை என இரசிக்க
மொழி கடந்த அழகை வர்ணிக்க மனம் தவிக்க
மொழியெடுத்தேன் அழகை கவிதையில் வடிக்க

கயல் விழிகள் காதல் மொழி பேச, ஆழி அலைபோல்
மனம் குதுாகலிக்க, பால் நிலவோ வானில், பெண் நிலவோ
அருகில், யாழும், குழலும் இவள் மொழியில்
நாணிச் சிவந்த பெண்ணோ என் நெஞ்சில்

இன்பத்துப்பாலிலும் இனிது சுவைத்த விழிகளும் வியக்க
வெண்பாவிற்கள் அடங்காத பெண்பால், அழகின் புதுப்பால்
மனம் ருசிக்க, அழகில் இவளோ சுட்ட பசும்பால்-அறிவும்,
ஐம்புலனும் இரசிக்க வள்ளுவன் சொல்லாத காமத்துப்பால்

கார்குழலில் பூவனம், கன்னி மேனியிலோ பூமணம்
பூவையோ சூடாத புதுவனம், அழகின் அரியாசனம்.
பொங்கும் அழகில் மங்கையோ கங்கை
கண்பட நெஞ்சில் மலர்வதோ காதல் உவகை

நுதல் தொட்டு இடைவரை இவளோ அழகின் மெல்லினம்
இடைதொட்டு பாதம் வரை இவளோ வல்லினம்
கொடி இடையோ நளினம், கொஞ்சும் கிளியோ
உயிர் , மெய்யோடு ஒன்றான தமிழினம்.

உன் நூலிடையில் ஒரு மேகலையாய் கட்டிக்கொள்
உன் பூம்பாதங்களில் கால்கொலுசாய் மாட்டிக்கொள்
உன் பூங்கரங்களில் பொன்வளையல்களாய் போட்டுக்கொள்
உன் கார்குழலில் புதுமலராய் என்னைச் சூடிக்கொள்

உன் கருவிழிகளில் மையாய் பூசிக்கொள்
உன் சிறு நுதலில் குங்குமாய் வைத்துக்கொள்
காதல் வீணை உன்னை நான் கலைஞனாய் மீட்ட
என் காதல் இசையாய் நீ பிறக்க, வாழ்வே இன்பமடி

அன்பில் கலந்த இதயங்களின் அபூர்வராகம் காதல்
நான்கு வேதங்களுக்கும் முந்திய அன்பின் வேதம் காதல்
மதம், மொழி சாதி, நிறம் கடந்த ஒரே வேதம் காதல்
காதலுக்கு தெய்வமில்லை ***காதலரே தெய்வம்***

கண்பார்த்து நெஞ்செழுதும் அன்புக் காவியம் காதல்
மண் பார்த்து மங்கை நீ நாண, கண் பார்த்து என் நெஞ்சம்
தேவராகம் பாட, மண்ணும், நீருமாய் நம்மனம் கலக்க
புன்னகையால்-காதல் வரம் தந்த தேவதை

இதயங்கள் இடம்மாறித் துடிக்க, நீயே நான்
எனப் பண்பாடிக் களிக்க, காதலில்லாமல் வாழ்வு இல்லை
காதலில்லாத வாழ்வு சாதலடி கண்ணே-காதல்
கரையேற கடவுள் தந்த ஏவாள் நீதான் பெண்ணே

காதல் சங்கமத்தில் நெஞ்சங்கள் கலந்து மகிழ்ந்திட
இருவரல்ல ஒருவர் என்றே இதயம் இன்புற
வானூறும் நிலவும், தேனாறும் வண்ணமலர்களும்
வாழ்த்திட, வாழும் நம் காதல்-காவியமடி கண்மணி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-8-2023

நிலவும் மலரும்

வண்ண நிலவிற்கு முகம் மறைத்த மல்லிகை,
இளங்கதிருக்கு இதழ்விரித்து அழகு காட்டி
நறுமணம் வீச-தன் மனம் காட்டி
காதல் சொன்னாள்.

கண்ணாளா நீயே என்று கதிரவனைக்-கணவணாய்ப்
பூ மனதில் வரித்தவள், மாலையில் கதிரும் கண்மறைய
உன்னைப் பரிந்து ஒரு கணம் வாழேன் என்றே
உதிர்ந்தே தன்னுயிர் நீத்த நித்திலவல்லி-

ஒரு தலைக்காதலால் வாடிய நிலவும்
வண்ணமலர் உதிரக்கண்டு உடல் நலிந்தது,
இருள் சூடி அமாவாசை என்றே
முகம் மறைத்துச் சோகம் பகிர்ந்தது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-8-2023

நூலகத்தில் கண்ட நூலிடையாள்

நூலகத்தில் கண்ட நூலிடையாளோ,
நூதன அழகின் கை நூல், மையெழுதிய கயல்விழிகளில்
கவிதைகள் நூறு, கண்டு கவிதை படிக்க
கம்பனின் கன்னியோ அழகின் வற்றாத ஆறு

கார்குழல் மலர்களில்-கம்பனும், காளிதாஸனும்
சொல்லும் காவியங்கள், செப்பிடும் மொழிகளில
அகிலன், கல்கி, பார்தசாரதி சொல்லிய
கதையழகின் சொல்லோவியங்கள்

வளையணிந்த பூங்கரங்களோ பொன்விலங்கு,
பூங்குழலில் குறிஞ்சிமலர்களின் ஞாபகம்
விற்புருவம், வேல் விழிகளில் -பாண்டிமாதேவி
யவன ராணியின் நாணிய பாவங்கள்

மெட்டியொலியில் சிவகாமியின் சபதம்
மோகனத்தில் கொத்தமங்கலம் சுப்புவின்
தில்லான மோகனாம்பாள் -அபிநயத்தில்
காவிரி மாதவியின் கோலம்

பூவையின் அணிகளில் ஐம்பெரும் காப்பியங்கள்
கார்குழலில் காளிதாஸனின் மேகதூதம்
முத்துப் புன்னகையில் சுந்தர காண்டம், ஆண்டாளின்
கவிதைாய் , மீராவின் பாடலாய் அணங்கு

நாணிப்பூத்த புன்னகையும், ஆனிப்பொன்மேனி அழகும்-
கதையா, காவியமா எனத் திணறடிக்க-செந்தாமரைப்
பாதங்களில் சிலம்பின் இன்னிசை-மைதிலி, பாஞ்சாலி,
கண்ணகி கலந்து செய்த காப்பியத்தின் மெல்லிசை

போற்றிடும் அழகுப் புன்னகையில் போரும் அமைதியும்,
தொழும் அழகாய் -கவி தாகூரின் கீதாஞ்சலி
படித்துச் சுவைக்க ஓஷோவின் ஆன்மீகம்-
பாவை இவளில் பாரத இராமாயணம்

கண் பார்த்து நெஞ்செழுதும் காவியத்தில்
பார்வதி, தேவதாஸ், பார்த்து, இரசித்து இன்புற,
ஷேக்ஸ்பியரின் யூலியட், நெஞ்சு கதற இவளோ
என்தன் லைலா , நினைந்தழ என்தன் மும்தாஜ்

மார்க்ஸிம் கார்க்கியும், அன்டன் செகோவ்வும், சரத்சந்திரரும்
எழுதிய கதைகளில் நெஞ்சைத் தொட்ட பாத்திரமாய்
அகிலனின் நெஞ்சினலைகளாய், பாவை விளக்காய்-
அவள் நினைவுகள் அழகிட்ட அழகுக்கோலமாய் இவள்

நாணிய அழகில் கல்கியின் அமரதாரா
காதல் காமத்தில் வீழ்ந்து-ஜானகிராமனின்
மோகமுள் நெஞ்சைத் தைக்க
நானோ காண்டேகரின் “யயாதி”

இராகுல் சாங்கிருத்யாயனின், வால்காவிலிருந்து
கங்கைவரை வாழ்ந்த குலமாதோ இவள்
டால்ஸ்டாயின் அனா கரினாவோ இவள்

அளாவிப் பார்த்தேன் அழகோ புது நூலகம்
ஜெயகாந்தனின் புதுமையும். புதுமைப்பித்தனின் புரட்சியும்
அசோகமித்திரனின் அதிசயமும் பூம்புகார் கண்ணகியும்
இணைந்த புதுக்காவியம், காதலர் நாம் படிக்க குறளோவியம்

நடையும் நாட்டியமாக, பேச்சும் அழகிய அபிநயமாக
காவிரி மாதவியா இவள்-காஞ்சி மாமல்லன்
மனதை கொள்ளையிட்ட சிவகாமியாய்
காமத்துப்பால் சுவைக்க வள்ளுவன் வாசுகியாய் இவள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13.8.2023

ஒரு மலரின் கதை

சுற்றிச் சுற்றி சுருளி வட்டத்தில் இதழ்கள் கட்டி-சுகந்தம் பூசி
சுந்தர வடிவாய்-அமுத சுரபியாய்த் தேன் ஊற, வண்டும்
தேனீக்களும் மொய்த்து ரிங்காரம் பாட, வண்ண மங்கையர்
மயங்கி கூந்தலில் சூட, எம்மைப் படைத்த இறைவன்

காலைப் பனியில் நீராடி , கதிரில் முகம் துவட்டி-
கண் மலர்ந்த என்னைத், தென்றலும் தழுவி வாசம் நுகர
தேன் வண்டும் சுவைத்து பசியாறி மகிழ
என்னைக் கொய்த பூக்காரி

மல்லிகைச் சரமாய் மாறி, மணமகள் கூந்தலில்
மணம் வீசி மகிழ்ந்தேன், பள்ளியறைப் பாடம் தொடங்க
பஞ்சணையும் கசங்க-மங்கையும் மயங்க
மலர்ச்சரமும் குலைய, விடியலில் வாடிய சரமானேன்

அழகாய்ப் பூத்து ஆனந்த நறுமணம் வீசி, தேனீக்கு உணவளித்து
பூக்காரிக்கு வாழ்வாகி-மணமகள் சூட மலர்சரமாகி
வண்ணக் கன்று உண்டு மகிழ-வீசி எறிய
விடியலில் வீதிக்கு வந்த குப்பையுமானேன்

ஒரு பொழுதில் பல நிலைகள்
ஒரு மலரின் மலரும் நினைவுகள்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13.8.2023

பாயும் தவளை

அல்லி பூத்த பொய்கையில் மெல்ல குதித்தது
சின்னத் தவளை “ பொத்” எனக் கேட்டது
சத்தமா? சங்கீதமா? சில் வண்டு கேட்டது

புல்லில் உறங்கும் பனித்துளியை
கதிர் தொட்டு எழுப்பிட-கண் விழித்துச் சிரித்தது
ஆவியாகி கண்மறைந்து போனது

அக்கினிப் பூவை அழகாய் தலையில சூடி
உருகிச் சிரிக்கும் மெழுகுவர்த்திகள்
தீச்சட்டி ஏந்தும்-மங்கையரோ?

இலையுதிர்கால சூறைக்காற்று-வீழ்த்திட
இலைகளின்றி தவித்துப்போனது
மரத்தை தள்ளிப் பார்த்து தோற்றுப்போனது.

கடலுக்கு தேனாய்-வேருக்கு நீராய்.
மழைத் துளியும் இனித்தது

ஓயாத காதல்-ஓடும் கங்கை போன்றது

கையளவு வாழ்வில் கடலளவு மனச்சுமைகள்

கூட்டுக்குள் இருந்து முட்டை
குஞ்சாகிப் பறந்தது
வெற்றுக் கூடு-கோடை காலம்.

இலையும். முதுமையில் காவியுடுத்து துறவு பூண்டது
வீடு துறந்து காற்றில் ஆடி
ஆனந்தம் சந்நியாசம் என்றது

வெயிலில் காயும் ஈர ஆடைகள்
மழையில் நனையும் பயிர்கள்
புயலில் ஆடும் நாணல்கள்
முறிந்து மண்ணில் விழும் ஆல விருட்சங்கள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra

பெண்ணே பேரின்பம்

கன்னியர் வண்ணங்களும், காதல் கவிதைகளும் நெஞ்சை வாட்ட
நாணிச் சிவந்த மேனியும், நறுமணப் புன்னகையும்-கூடிக் களிக்க
கொஞ்சி அழைக்கும் கயல் விழிகளும், செந்தேன் இதழ் கள் பருகிப்
போதை கொள் நூலிடை ஓடிய அணைத்துக் “கொல்” அழைத்தன

கன்னம் கனியக் கனிந்த இதழ்களில் சூடேற்று-கார் கூந்தலை,
கள்ளிருக்கும் பூவனமாய் மாற்று- பிறை நுதலில் இதழ்களால்
பொட்டிட்டு-மார்போடு சேர்த்தணைத்து, கலைமகள்
கைப்பொருளில் காதல் இராகத்தை அரங்கேற்று

செவ்வாழைத் தொடைகளும், செம்பஞ்சுப் பாதங்களும்
கொடியிடையும், குவித்த கரங்களும் அபிநயம் காட்ட
காதல் நர்த்தனத்தை என்னோடு ஆடு, சிவசக்தியாய் மாறு
படைப்பை தொடங்கி-படைப்பாய் நாம் மாறி படைப்போம்

ஆகுதியாய், நம்மை நாமளித்து
காதல் வேள்வி யாப்போம்-அழைப்பாக,
ஐம்புலனும், ஆறறிவும் மயங்க
காமன் கணைபட்டு காதலாகி வாடி நின்றேன்

பூக்களைப் பார்த்து பூவையரைப் படைத்தானா இறைவன்
பூவையரைப் பார்த்து பூக்களைப் படைத்தானா?
தாய்மையின் அழகில் தன்னைக் கண்டு வியந்தவனும்
காதலரைக் கண்டு காதலாகித் தவித்தான்

வாட்டும் தன் தனிமையை புரிந்து
காதல் நோய் தனக்கும் என்ற இறைவன்
“திருநங்கையோ” உமையொருபாகனோ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14.8.2023

பௌர்ணமி காலத்து இரவுகள்

ஆடை மூடிய அழகில் காலைப்பனியில் பூத்த ரோஜா
மயக்கும் மாலை கழிந்து இனிக்கும் இரவு மலர-மங்கையோ
விண்ணோடும் முகிலோடும்-ஆடை கலைந்து விளையாடும்
வெண்ணிலா, காமபோகத்தின் பெண்ணிலா

மங்கையை ஆளும் காமுகனுக்கு-மன்மதக் கலை
சாபமான நிலை, காமபோகத்தின் அட்சயபாத்திரம்
காதல் யோகமில்லாத நட்சத்திரம்

உடற்சுகம் தேடுபவர்க்கு, ஆடைச்சுமை தடையாக-நாளும்
அம்மணமாகும் ஏவாளின் நிலை, ஆதாமாய் யாருமில்லை
அநாதை வாழும் இடமும் ஏதேன் தோட்டமில்லை
கடவுளோ என்றும் கண் மறைந்த நிலை

ஆச்சாரச் சமூகத்தில் இவள் விபச்சாரி-ஆச்சார
கோலங்கள் இருளில் கலைய கண்ணகி இருந்தும்
இரவில் மாதவி தேடும் கோவலர் -இந்திராணி
இருந்தும் அகலிகை நாடும் இந்திரர்

அருவெறுத்த எச்சில் முத்தங்களால்-காயமான
செவ்விதழ்கள், சுக்கிலம் சுமந்து நொந்த கருப்பை
காமுகர் நாளும் உழுது விதைத்திட கசங்கிய பூமேனி
கல்லாய் மரத்துப்போன காதல் மனம்

அவளுக்கென்று ஓர் மனம் இருப்பதை, காதலிற்காய் ஏங்குவதை
யாரும் அறியவில்லை, இந்திரனாய், சந்திரனாய் வந்தவன்
கண்ணிலும் கருத்திலும் காமமே கனவு
அகலிகை மனமோ, சாபமின்றிக் கல்லாகும் பொழுது

அன்டனியோ, சீஸரோ அழகி கிளியோபத்ராவை
முற்றுக்கையிடவில்லை, மடிந்தபோதும்-ஆடை மூடிய அழகில்
அவள் ஒரு தேவதை, பெண்மையின் அழகு நிலையில்
மாதவியும், மணிமேகலையும் ஒன்றான நிலை

பெண்மையைத் தாயாய், மனைவியாய் தெய்வமாய் காண
ஆண்களுக்கு ஏனோ வரமில்லை, காமத்தால் பிறந்த குறை
காலமெல்லாம் வாட்டும் நிலை தீராத சாபமோ?
விலங்கு நிலை மாறாத சுபாவமோ?

ஆடை கலைந்திட திரௌபதி கதறினாள்-அசோகவனத்தில்
சீதையும் புலம்பினாள், ஆடை களைந்து அங்கம் படையலாக
மங்கையின் மனமும் கல்லானது, விலைமகள் வாழ்வும்-நாளும்
நெய் வார்த்த தீயில் நீராடும் நிலையானது

ராஜாராமன் கர்ப்பிணி சீதையைக் காட்டுக்கு
அனுப்பினான், சிறையெடுத்த சீதைக்கு-இராவணனோ
அசோகவனத்தை சோலையாக்கினான்-மாமன்னன்
மண்டியிட்டே குலமகளிடம் காதலை இரந்தான்

விலைமகள் வாழ்வு மங்கையர் விரும்பாத சாபம்
ஆணினத்தின் நீங்காத பாவம், குலமகளாய்
வாழ்வு அமைந்தால் விலைமகளாய் யாருமில்லை
இறைமகனும் வாழ்வில் வந்தால் விலைமகளும்
புதுமகளாய் மாறும் அழகு நிலை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14.8.2023

சொல்லத் தயங்கிய காதல்

கண்டு நெஞ்சம் வியந்த கன்னியோ பூ அழகு-கண்களால்
புன்னகை சிந்தி அன்பைச் சொல்லிய அழகியோ பேரழகு
விழிகள் உண்டு சுவைக்க அழகிலோ திருமகள்
மொழி கேட்டு செவிகளும் இனிக்க கலைமகள்

ஆனிப்பொன்னில் செதுக்கிய மேனி, அறிவும் அழகும்
இணைந்த கலைவாணி, வங்கியின் மேலதிகாரி,
காதல் சொல்லத் துடித்த கவிஞனோ
தகுதியல்லாத ஏழையான நீதி

காணும்போதெல்லாம்-கண்களால் கவிதை சொல்லும் கயல்கள்
செவ்விதழ்களில் மலரும் முத்துப்புன்னகைகள்-சொல்லத்
தயங்கிய காதல் ஊமையானது, வெல்ல முடியாத விதியால்
கன்னியோ வைத்தியருக்கு துணைவியானது.

பல்லாண்டு கழிந்த பின்னர் பொன்மானுக்கோ புற்றுநோய் -சேதி
நெஞ்சை பேரிடியாய் தாக்க அனலில் விழுந்த புழுவாய்-
இதயம் துடிக்க அன்பு இறைவனை மனமும் இறைஞ்சிட
கண்மூடி மீளாத்ததுயில் கொண்ட பெண்மை

கண்ணுக்குள் சிரிக்கும் காதலின் மென்மை
காதலைச் சொல்லாத கோழையாய் ஆண்மை
எண்ணிடத் துடிக்கும் இதயம், எல்லாம்
உம் சித்தம் என்றே பணிந்த நெஞ்சம்

நீர் எழுதி விழிகள் பனித்திருக்க, கார் மூடிய வானாய்
நெஞ்சம் சோகத்தில் கறுத்திருக்க-நிலையில்லா வாழ்க்கை
நீர்க்குமிழி போன்றது, சொல்ல மறந்த காதல்
நெஞ்சில் சோகம் சொல்லித் துடிக்குது

பிரிவோ நெஞ்சில் தைத்த ரோஜா முள்ளானது
உறவோ சுவாசத்தை நிறைக்கும் ரோஜா வனமானது
மலரோ மாலை வருமுன் வாடிப்போனது
வாழ்வோ கலையும் கனவானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-08-2023

சுகம் எங்கே ?

தாய்பாலுண்டதும், தாய் மடியில் தூங்கியதும் பேரின்பம்
கண்ணீர் மறைய, அமைதி நிலவ அன்னை மடியிலே சொர்க்கம்
மரணம் வரைக்கும் மாறாத தாய்மை, மரித்தாலும்
மறவாத தாயே தெய்வம், மாறாத சத்தியம்

அன்னையின் கைபட்டு பழஞ்சோறும் பழமும்
அமுதாய் மாறிய அதிசயம் என்னென்பேன்-நாவினிக்க
நெஞ்சு நினைக்க என்னே என்தன் பேரின்பம்

கன்னியர் கடைவிழிப் பார்வை இன்பமே, அண்ணலும் நோக்க,
அவளும் நோக்க முறுவலும், கண்கள் காதலை எழுத
பொன்மானாய் காதலை துரத்தி ஏமாறுவது கொடிய நரகமே
எண்ணிட முதற் காதல் என்றும் மறக்கமுடியாத துன்பமே

காதலும் ஒரு காலம், வசந்தமும் வாழ்நாளில் ஒரு போகம்
வந்தவளால் வாழ்ந்தவரும் உண்டு-நொந்து தசரதன்போல்
மாண்டவரும் உண்டு, ஸ்ரீராமனை மணந்தும் நொந்த
சீதை, இல்லறமே நல்லறம் என்ற வள்ளுவன்

முற்றும் துறந்தவரோ போதிமரத்தடியில் ஞான புத்தரானார்
பூரணசரணாகதியில்- கொடிய சிலுவை மரணத்திலும்
அமைதி கண்டவர், தந்தையும் நானும் ஒன்றென்றார்
அத்வைத நிலையயாய் அவதார புருஷர்களின் பேரழகு

இன்பத்தை வெளியே யாசித்தால் துன்பமே
எல்லாம் நம்முள்ளே அனுபூதியில் அறிந்தால்
என்றும் இன்பமே-

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-08-2023

சுவரில்லாத சித்திரங்கள்

நலம் பெற வந்த இருவர், நட்பால் இணைய மனம் கலந்து
உள்ளமும் நலம்பெற, உடலும் மெல்லக் குணம் பெற
உறவாடிக் கழித்த நாட்கள், வாதை குறைந்து
வைத்தியசாலையும் வீடாய் மாறிட-மகிழ்ந்த உறவுகள்

அழகான பச்சை மலைத் தொடர்கள் நீண்டு விரிந்திட
அற்புதமாய் நெளிந்தோடும் நதி, கண்களில் கனவும்,
நெஞ்சில் காதலும் உலாவிடக், கைகோர்த்து கதைபேசும் காதலர்
ஜோடிகளாய் கானம் பாடும் வானம் பாடிகள்

மெல்லப் பறக்கும் கடற்காகங்கள்-புன்னகைப்
பூக்கள் சிந்தி கூடி விளையாடும் குழந்தைகள்
நீல வானில் உலாவும் வெண்மேகங்கள்.
நித்தம் புதுப்பாடல் பாடும் புள்ளிக்குயில்கள்

எழுந்து உட்கார முடியாத எனக்கு-நண்பரோ யன்னல்
வழியே தெரியும் காட்சிகளை விபரிக்க, காண முடியாத உலகை-
நண்பர் கண் வழி கண்டு இதயம் பூரிக்க, மனம் குதூகலிக்க
நிஜங்களின் தரிசனம்-நண்பனால் மீண்டும் நிஜமாகும் அதிசயம்.

நோய் மறந்து -வலி மறந்து-கவலை துறந்து சுவைத்துச் சொல்லும்
கதைகள், நாளும் தெம்பூட்ட, படுக்கையில் கிடந்த என் வாழ்வில்
நாளும் புது வசந்தம், அமாவாசை வானில் நித்தம்
ஒரு பௌர்ணமி, இதயத்திலோ இனம் புரியாத நிம்மதி

வாழ்வில் பல வசந்தமும், கோடையும் வந்து போயிட-
நண்பனோ விழிகளாய் மாறி உலகைக் காட்டிட-ஒரு நாள்
காலையில் உறங்கும் நண்பரை எழுப்பிக் களைத்த தாதி
உம் நண்பர் தூக்கத்திலே காலமானர் சொன்ன சேதி

என்னைத் துக்கத்தில் ஆழ்த்தாமல் தூக்கத்தில் பிரிந்தாயே
என் நண்பா, நூலாறுந்த காற்றாடியாய் மனம் அலைய
இரு தலைக் கொள்ளி எறும்பாய் இதயம் துடிக்க
அழுதேன் ஆனமட்டும் அழுதேன் துயர் தீர

எல்லாம் முடிந்திட-என் நண்பர் கட்டிலுக்கு மாறியவன்
மிகுந்த சிரமத்தோடு யன்னல் வழி நோக்க
தலையை உயர்த்திய எனக்கோ பேரதிர்ச்சி

அதிர்ந்து போனேன்-அப்பால் ஏதுமில்லை
இருந்ததோ வெற்றுச் சுவர்-நெஞ்சம் விறைக்க
தாதியிடம் நண்பர் கதையை கூறினேன்

உம் நண்பருக்கு பார்வை இல்லை, எதையும் பார்த்ததும் இல்லை
உங்களை பரவசப்படுத்தி-நோய் குணமாக அவர் சொன்ன கதைகள்
அற்புதமான மருந்து மாத்திரைகள், சாகும் விளிம்பிலும்
உங்களை வாழவைக்க அவர் புரிந்த சாதனை அளப்பெரிது

அழுவதா சிரிப்பதா அறியாது குலுங்கிக் குலங்கியழுதேன்
நண்பனின் கதைகள் என்னைக் குணமாக்க, வெற்றுச் சுவரில்
அவர் முகம் புன்னகைக்க, உலகைப் பார்க்கும்
ஊனக்கண்களல்ல அவை, உள்நோக்கிய ஞானக்கண்கள்

அந்த கண் யார்? அந்தகன் யார் புரிந்திட
மெல்ல வடியும் கண்ணீர், பிரியாத உறவின்
பிரிவின் வேதனை சொன்னது.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra- 17-08-2023

தேய்பிறை நிலவின் விடியாத இரவுகள்

தலைச் சுமையை இறக்கி வைக்க சுமைதாங்கி உண்டு-
வறிய மங்கையரின் வரதட்சணையை இறக்கி வைக்க
சுமைதாங்கி ஏது? கடவுளும் சிலையாய் ஆன நிலை
காதற்காமம் மனதை வருத்தும் நிலை

வேண்டிய போது இறக்கி வைக்க இது தலைச்சுமையல்ல-
என் மனச் சுமை சொல்லில் எழுதி வைக்க-என் வாழ்வு
காவியமல்ல, பாலியல் தொழிலாளியின் சிதைந்த ஓவியம்
அன்பு மனதில் ஆறுதல் வேண்டும் ஈரவிழிக் காவயிம்

கழுமரம் சுமந்த மனுமகனின் தேகத்தில் கசையும்
காயங்கள் ஆறும், வசை சுமந்து வனப்பை
பறிகொடுக்கும் என் மனதிலோ -இன்றும்
ஆறாத காயங்கள், தீராத சோகங்கள்

துடிக்கும் இதயத்திற்கும் பலமில்லை, காதலிற்காய்
தவமிருந்த கன்னிக்கும் மாலையிட வரமில்லை-விடியலில்லா
விலை மாதாய் வாழ்வு-காமுகர் உழுது விதைத்திட
பூமேனிக்கு நாளும் பல்முறை சாவு

காதல் புரியாமல் காமத்தில் உழுது, மதுகாரியாயத்
தேனருந்த தெரியமல், மகரந்தம் சிதைய-ஓநாயாய் குதறி
விருந்தென சுவைக்காமல்-விந்து கழித்து- வல்லுறவு செய்யும்
காமுகனுக்கு காதற் கலையும், காமசாஸ்திரமும் ஏனோ?

தேகபாரத்தில் மலரும் நசுங்க , மனப்பாரத்தில்
சிந்து பாடும் குயிலின் மனமும் நொருங்க,
மோக வெப்பத்தில் இதயம் கருக-சொல்லித் தெரியாத
காமக்கலை, காசுக்கு விலையாகும் அவலநிலை.

கண்ட அழகில் கண்கள் வியந்து, நெஞ்சம் கவிபாட
காதல் மலர்ந்து கண்ணியம் பூப்பூக்க, மோகம் கடந்து
காதல் மழை தூற, ஈருடல் கலந்து இன்னிசை பிறக்க
வியந்து படிக்கும் காம சூத்திரம் மனமதக் காவியம்

உடலுறவின் கலைநயம் அறிந்து, உயிரினுள் புகுந்து
ஓர் அதிசயம் கண்டு, உறவாடல் படைப்பின் உயர் நிலை
எனத் தெளிந்து புனிதமாகி-பரவசம் கொண்டு-பக்தனாய்
பருகும் இன்பத்துப்பால் அமுதிலும் இனிது

வள்ளுவன் வாசுகியாய் மாறி, வா சுகி என்றே
வள்ளுவன் அழைக்க, வார்த்தையின் சுகந்தத்தை
வனிதையும் இரசிக்க, நாணிய விழிகளில் கூடிய செம்மை
பூ இனம் இவள்-புதுத் தேனிவள் மனம் பாடும் மோகனம்

பூவில் தேனருந்து பூந்தேனி ரீங்காரம் இசைக்க
பூந்துகில் கலைந்து புதுமலர் விரிந்திட-பூத்தவழகில் மனம்
அழிந்து சுகம் தெரிந்ததே, சொர்க்கம் இதுவென நாம் அறிந்திட
ஆதாம், ஏவாள் நிலை உள்ளத்தில் பிறந்ததே.

பள்ளியறையும் ஏதேனாய் மாறிட புள்ளிக் குயிலாய்
மனம் இசை பாடிட புதுவாழ்வு வெறும் கனவாகும்
கற்பனையாகும் , வேதனையாகும்
விலைமகளின் இராப்பொழுதும் விலையாகும்

கோயில்களுக்கும் நடை சாத்த நேரமுண்டு
ஆடும் கோலமயிலுக்கு ஓய்வுக்கு நேரமில்லை-நொருங்கிய
உள்ளத்திற்கு வாழ்வும் சுமையான நிலை, அழகும், இளமையும்
இருக்கும் வரை பாலியல் பசிபோக்கும் நிலை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-08-2013

தோகை மயில்

தோகை என விரிந்த கார்குழலைத் துவட்டி,
மஞ்சள் வெயிலில் மயிலொன்று மாடியில் உலாவிட
பூவை அழகை உண்டு, காதல் வயப்பட்ட காளை மனம்
தேனுண்ட வண்டாய் போதையில் ரீங்காரம் பாடிய குணம்

மாடியை நோக்கி மனம் தவமிருக்க-காட்சி தந்து
புன்னகையால் காதல் வரம் தந்த தேவதை
நிலாக் கண்டு மலர்ந்த அல்லியாய் மனம் பூத்தாட
காதலான மனமோ இனிக்கும் தேன்வதை

கண்டும் மறையாத காட்சியாய், கனவிலும் இனிக்கும்
இன்பத்தின் மாட்சியாய் , என் காதல் வானத்து
தேன்நிலவு, கம்பன் பாட அழகோ காவியம்
இரவிவர்மன் எழுதிட பூவையோ சித்தன்ன ஓவியம்

கண் பார்த்து மனம் சுவைத்த பேரழகில் மனம் மயங்க
காணாத கணம் எரிநரகான யுகமாய் என்னை வாட்ட
மாடி நோக்கி விழிகளின் மாறாத காதல் தவங்கள்,
கண் மறைந்த நிலவு, அமாவாசை வானாய் என் உலகு

கையளவு மனசுக்குள் கடலளவு காதல் பொங்க
காதலில்லாத வாழ்வு சாதல் என்றே மனம் வெதும்ப
நிலவு காணமல் அல்லி முகம் மலருமா என்றே
காதல் தவமிருக்கும் காதலன் நான்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-08-2013

நட்பு

உண்மை நட்பில் பிரிவில்லை, பிரிவதும் நட்பில்லை
எண்ணில் பூச்சிமாய், இசையில் மௌனமாய்
ஆணவம் அழிந்த அன்பே உயர் நட்பு

குசேலனும் கண்ணனும், -கர்ணனும்
மன்னனும் கொண்டதும் உயர் நட்பு
காணாது- கோப்பெருஞ்சோழனும், புலவர்
பிசிராந்தையர் கொண்டதும் காவிய உறவு

மடிந்த மன்னனுக்காய், வடக்கிருந்து
உயிர் நீத்த அன்பு-வாழ்வு சாவு கடந்து
வாழும் தெய்விக உறவாய் நட்பு

கம்பனும், சோழனும் கொண்ட நட்பும் கலைந்த
கனவானது, ஔவையும், அதியமானும் கொண்ட
நட்பு, வாழும் கொடையானது.

குசேலனிடம் கண்ணன் காட்டிய நட்பு
பிடி அவலிலும் இனிது, மனைவியை சேடியாக்கி
மன்னவன் புரிந்த தொண்டு பெரிது.

நட்பிட்காய் சாதியம் கடந்த-மன்னவனாய்
துரியோதனன்-நட்பிட்காய்
உயிர் கொடுத்த நண்பனாய் கர்ணன்

குடை, படை, கோல் ஏந்தி அரியணை அமர்ந்தாலும்
தர்மனுக்கோ நணபனாய் யாருமில்லை
பெருவள்ளலிற்கு அரிய நண்பனாய்
அன்பினால் இன்புற்ற மன்னன் துரியோதனன்.

நட்பிலும் கற்புண்டு-காவியச் சிறப்புண்டு-ஒரு நாள்
வாழும் மலரையும் உயர்வாய்ப் போற்றும் தேனீ
பல நாள் வாழும் காகிதப்பூவை
கண்ணெடுத்தும் பாராத ஞானி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-08-2013

உறவும் பிரிவும்

வாழ்வு முடிவற்றது-அன்பு அழிவற்றது
அன்பிற்கு பிரிவில்லை-மரணத்திற்கு
அன்பை பிரித்திடச் சக்தியில்லை
அன்பை அழிக்கவும் ஆற்றல் இல்லை

உடல்கள் மடிந்தாலும்-இதயத்தில் பூத்த
உணர்வுகள் மடிவதில்லை
உடன் பிறப்பைபோல் இனிய
உறவு ஏதுமில்லை



வறுமையோ வளமையோ, இளமையில்
ஒரு கூட்டுக் குஞ்சுகள்போல் வாழ்ந்த இன்பம்
மாளிகையிலும் இல்லை. ஆற்றுவதற்கு
வார்த்தைகள் இல்லை தேற்றுவதற்கு தாயும் இல்லை

உன்னைத் தேற்ற என்னிடம் ஏதுமில்லை
காலம் காயத்தை ஆற்றும்
கடவுளே நம் துணை
எல்லாம் அவன் செயல்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-08-2013

இன்ஷா அல்லா.